

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

---

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு மார்கழி மாதம் 8ஆம் நாள்**

**2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் நாள் வியாழக் கிழமை**

**அதிகாரம் : அறன் வலியுறுத்தல் - குறள் எண் : 33**

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

**குறள் விளக்கம்**

செய்யக்கூடிய செயல்கள் எவை ஆயினும், அவை எல்லா இடங்களிலும் தொய்வில்லாத அறவழியிலேயே செய்யப்பட வேண்டும்.

<u>பழமொழி ( Proverb )</u>

***A little stream will run a light mill***

**சிறு துரும்பும் பல் குத்த உதவும்**

<u>பொன்மொழி</u>

தெரியாது என்பதை தைரியமாக ஒப்புக்கொள்ளுங்கள். தெரியாததை தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்

<u>இரண்டொழுக்க உறுதி மொழி</u>

1. பொய்யுரைத்தலால் புகழும் கெடும் எனவே ஒரு போதும் பொய் கூற மாட்டேன்
2. சோம்பலினால் வளர்ச்சி கெடும், எனவே எப்போதும் சுறு சுறுப்பாய் செயல்படுவேன்.

<u>இன்றைய பொது அறிவு வினா விடை</u>

1. ஏழு தீவுகளின் நகரம் – மும்பை
2. நான்கு அறைகளுடன் கூடிய வயிறு உள்ள விலங்கு மான்



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

### தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

*I have to go to my home.*

நான் என்னுடைய வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

*The Box is very heavy*

இந்தப் பெட்டி மிக கனமாக இருக்கிறது.

### வரலாற்றில் இன்று

- இந்திய விவசாயிகள் தினம்
- முதல் டிரான்சிஸ்டர் பெல், வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது(1947)
- உலகின் மிகப் பெரிய இரும்பினாலான கோபுரமான டோக்கியோ கோபுரம் திறக்கப்பட்டது(1958)

### இன்றைய செய்திகள்

- தமிழகத்தில் ஓமிக்ரான் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்பு – சுகாதாரத்துறை செயலர் எச்சரிக்கை
- தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சொந்த ஊர் செல்லும் மக்களுக்காக சென்னையில் இருந்து நாகர்கோவில், நெல்லைக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என தென்னக ரயில்வே அறிவித்துள்ளது.
- தமிழ்நாட்டில் மேலும் 2 தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு தேசிய மருத்துவ ஆணையம் அனுமதி அளித்துள்ளது. இதன் மூலம் மொத்த தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.
- கேரளாவில் மேலும் 9 பேருக்கு ஒமிக்ரான் தொற்று பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. கேரளாவில் இதுவரை 24 பேர் ஒமிக்ரான் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- மலேசியாவில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை 14 பேர் உயிரிழந்துள்ளார். 70,000 பேர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றார்.
- வடமாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் பனியுடன் குளிர் காற்று வீசக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.